//

**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.53/2022</u>**

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் தேதி வாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.1**ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திருமதி. S. சுசீலா, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம், என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சித்தராஜ் | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| கிராமம் | : | ஆசனூர் | வயது | : | |

**பி.வா.சா.1 : முதல் விசாரணை**:

நான் ஆசனூர் கிராம நிர்வாக அலுவலராக இருக்கிறேன். சம்மனில் குறிபிட்டப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். ஆசனூர் கிராம க.ச.எண்.374/17 தற்போது க.ச.எண்.374/17 A மற்றும் 374/17B என உட்பிரிவு ஆகியுள்ளது. க.ச.எண்.374/17ன் விஸ்தீரணம் 0.01.15 பு.ஹெக்டர் ஆகும். க.ச.எண்.374/17A பூமிக்கு யார் பெயரிலும் பட்டா வழங்கப்படவில்லை. க.ச.எண்.374/17B பூமிக்கு நாகராஜப்பா மகன் ஸ்ரீகண்ட மூர்த்தி பெயரில் பட்டா வழங்கப்பட்டது. க.ச.எண்.374/17A மற்றும் 374/17B ஆன அடங்கல் பதிவேடுவை கொண்டுவந்துள்ளேன். அந்த அடங்கல் பதிவேடு **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. க.ச.எண்.374/17B ஆன நத்தம் தூய சிட்டா **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. க.ச.எண்.374 கான புலவரைபடம் **சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் க.ச.எண்.374/17A பட்டா கெம்பமணி கணவர் பெயர் பசுவராஜ் என வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வருவாய் துறை ஆவணங்களில் கெம்பமணி பெயரில் பட்டா மாறுதல் செய்யப்படவில்லை. க.ச.எண்.374/18 யார் பெயரில் உள்ளது என்றால் நாகராஜப்பா மகன் ஸ்ரீகண்ட மூர்த்தி பெயரில் உள்ளது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பட்டா வருவாய் துறையினரால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அனுபவத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் க.ச.எண்.374/17A என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அந்த சொத்தில் வாதி கெம்பமணி இருக்கிறார் என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.04.16 14:49:16 +0530

District Munsif